| | | | |
|---|---|---|---|
| 28.09.2021 | அசல் வழக்கு எண்.198/2018 | வா .சா.2 | திரு.வினோத்<br>த/பெ.மாதைய்யன் |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை - (1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

வாதி சண்முகசுந்தரம் என்னுடைய மாமா. வாதி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என்னை அழைத்து வந்தாரா என்றால், ஆமாம். எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் எந்த அழைப்பாணையும் வரவில்லை. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி தயாரிக்கப்பட்டது என்றால், வக்கீலிடம் வாதி சொன்னார். என்னுடைய பிரமாண வாக்குமூலம் எந்த தேதியில் தயாரிக்கப்பட்டது என்று தெரியாது. க.ச.747 ல் 3 ஏக்கரா 74 செண்ட் யார் யாருக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையி ல் பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். சுப்பைய கவுடர், சண்முக சுந்தரம் , ரவிசந்திரன் மற்றும் ரங்கராசிற்கு பாத்தியப்பட்டது. ரங்கராசிற்கு 87 செண்ட், ரவிச்சந்திரனுக்கு 75 செண்ட், சுப்பைய கவுடர் மற்றும் சண்முக சுந்தரத்திற்கு 2 ஏக்கரா 2 செண்ட் பாத்தியப்பட்டது. இந்த சொத்துக்கள் எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றால், கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது. எந்த வருட கிரைய ஆவணம் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்று எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் பகுதிக்கும் இந்த சொத்துக்கள் இருக்கும் பகுதிக்கும் இடையே சுமார் 10 கி. மீட்டர் தூரம் இருக்கும். எனக்கும் இந்த சொத்துக்களுக்கும் இடையே எந்த சம்பந்தமும் கிடையாது என்றால், சரியல்ல,. சொத்து என்னுடைய தாத்தா சுப்பைய கவுடரின் சொத்து ஆகும். என் தாத்தாவிற்கு எவ்வளவு பூமி பாத்தியப்பட்டிருந்தது என்று தெரியாது. என் அம்மாவின் பெயரில் எந்த ஆவணமும் இல்லை. என் தாத்தா பெயரில் தான் ஆவணம் இருக்கிறது. என் தாத்தா பெயரில் சொத்துக்கள் இருப்பதை காண்பிக்க எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பட்டா எண் 745 ஆகும். என் அம்மாவிற்கு சொத்து இருக்கிறது என்று இந்த தாவாவில் என் அம்மா தரப்பினராக இருக்கிறாரா என்றால் என் அம்மா தாவாவில் தரப்பினர் அல்ல. இந்த சொத்துக்களில் என் அம்மா இன்று வரை சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். 747/2 என்ற உட்பிரிவு எப்போது ஆனது என்று தெரியாது. சுமார் 5, 6 வருடத்திற்கு முன்பு தான் உட்பிரிவு ஆனது. அதற்கு முன்பு 747 என்ற ஒரே காலையாக தான் இருந்தது என்றால சரிதான். 747/1 ல் எத்தனை காலைகள் இருக்கிறது என்றால் 747/1 ஏ, 747/1 பி, 747/1 சி என மூன்று உட்பிரிவுகள் இருக்கிறது. 747/1 சி என்பது சண்முக சுந்தரம் மற்றும் சுப்பைய கவுடர் பெயரில் உள்ளது. அதற்கு வடபுறம் ரவிச்சந்திரன் பூமி உள்ளது. ரவிச்சந்திரன் பூமிக்கு

வடபுறம் ரங்கராஜ் பூமி இருக்கிறது. ரங்கராஜ் பூமிக்கு வடபுறம் எந்த காலை இருக்கிறது என்று தெரியாது. அந்த பூமி 747/1 ஏ க்கு வடபுறமாக ரங்கராஜ் பூமி தான் உள்ளது. 747 க்கு தென்புறமாக 729/1 ல் வாரி புறம்போக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த வாரி புறம்போக்கில் இருந்து தான் 747, 749 காலைகளுக்கு செல்லும் தடம் இருக்கிறது என்றால் சரிதான். 747,748 காலைகளுக்கு கிழபுறமாக இருந்து 746 காலை பூமி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 747, 748 பூமிகளுக்கு வடபுறமாக காட்டு பூமி உள்ளது என்றால் சரிதான். மழை வந்தால் காட்டு பூமிக்குள் இருந்து வரும் தண்ணீரானது 747,748 காலைகளில் கிழபுறமுள்ள கொடிகாலையின் வழியாக இருந்து தான் 729/1 ல் அமைந்துள்ள வாரி புறம்போக்கிற்கு வந்து சேரும் என்றால் சரிதான். 747 காலையில் மாரண்ண கவுண்டரிடமிருந்து சண்முகசுந்தரம் விலைக்கு வாங்கினார். அந்த பூமி எல்லாம் என் தாத்தாவிற்கு தனிப்பட்ட பாத்தியம் இல்லை என்றால், சரிதான். மாரண்ண கவுண்டரிடம் இருந்து சண்முக சுந்தரம் 1 ஏக்கரா 87 செண்ட் வாங்கினார். அந்த பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேன். அந்த பத்திரத்தில் குறிப்பிட்டு 747/2 ல் உள்ள வண்டித்தடம் மூலமாக மேற் படி பூமிக்கு சென்று வரலாம் என எழுதப்படவில்லை என்றால் சரிதான். சண்முக சுந்தரம் மாதைய்யனுக்கு அதில் 87 செண்ட் விற்று விட்டார். அந்த பத்திரத்திலும் 747/2 ல் உள்ள தடத்தின் வழியாக போய்க்கொள்ளலாம் என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த இரண்டு பத்திரங்களும் எழுதப்படும்பொழுது 747 காலை உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில 747 ல் காலை மட்டும் தான் இருந்தது என்றால் சரிதான். ஆதி காலத்தில் இருந்தே இரண்டு பூமிகளுக்கும் கிழபுறமுள்ள கொடி காலில் மழை தண்ணீர் போய்க் கொண்டிருந்தது . வழித்தடமாக இருந்ததில் மழைக்காலத்தில் தண்ணீர் போய்க்கொண்டிருந்தது. அவ்வாறு கொடி கால் இருந்த இடமும் நாங்கள் வழித்தடமாக உபயோகித்த இடமும் உட்பிரிவு செய்யப்பட்டபோது 747/2 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு வடபுறமாக இருந்த க.ச. 748 பூமிக்கு கிழபுறமுள்ள கொடிக்கால் 748/ 2 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது. 729/ 1 ல் இருந்து காட்டுக்கு வடபுறமுள்ள 747,748 வழியாக செல்லும் கொடி கால் தான் உட்பிரிவுகளாக செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அது பட்டா பூமி. 747/2 ல் 10 செண்ட் பூமி தனியாக வண்டித்தடம் உள்ளதை காண்பிக்க எந்த ஆவணமும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை. 747/2 ல் 10 செண்ட் வழித்தடம் அதனை 747 காலையின் உரிமையாளர்கள் தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. அவ்வாறு ஒரு ஆவணம் இருந்ததை பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. அவ்வாறு எந்த ஒரு ஆவணத்தையும் நான் பார்க்கவில்லை. காளைய கவுடர் தன் மகன்களுக்கு பாகப்பிரிவினை செய்யும் பொழுது 747/2 என்பது பொது வழித்தடம் என்பது எனக்கு தெரியும். காளைய கவுடர் சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு பாகப்பிரிவினை செய்தார்.

எந்த வருடம் என்று தெரியாது. அவர்கள் மகன்கள் யார் என்று தெரியாது. என் தாத்தாவின் மகன்கள் யார் என்று எனக்கு தெரியாதா என்றால் அவர் என் சின்ன தாத்தா. அவர்களுக்குள் பாகம் செய்து கொண்டது எனக்கு தெரியாது. 747/2 என்பது பொதுத்தடம் என்று எந்த பத்திரத்தில் குறித்தார்கள் என்று எனக்கு தெரியாது. 746 ரங்கராசிற்கு பாத்தியப்பட்ட பூமியில் கிணறு வெட்டியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த கிழபுறமாக உள்ள பூமிகள் யார் யாருக்கு எந்த விஸ்தீரணத்தில் உள்ளது என்ற விபரம் தெரியாது.747 க்கு வடபுறமுள்ள பூமியில் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த பூமிகளுக்கு 746 ல் உள்ள கிணற்றில் இருந்துதான் தண்ணீர் பாய்ச்சி வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. , 747/2 மற்றம் 748/2 ல் உள்ள கொடிக்கால் வழியாக பைப் லைன் போட்டு தண்ணீர் கொண்டு சென்றுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. சண்முக சுந்தரம் யார் யார் மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், ரங்கராஜ் மீதும் அவருடைய தம்பிகள் மீதும் தாக்கல் செய்திருக்கிறார். அவர்கள் பெயர் தெரியாது. சரியாக எத்தனை பேர் என்று தெரியாது. யார் யார் மேல் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கிறார் என்று தெரியாது. என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் சண்முக சுந்தரம் சொல்லி தான் தெரியும். என் மாமாவை தவிர 747 ல் உள்ள மற்ற பங்குதாரர்கள் வேறு வழக்கு எதுவும் போடவில்லைஎன்றால் சரிதான். என் மாமா என்னிடம் சொன்ன சங்கதிகள் பொய்யான சங்கதிகள் என்றாலும், இந்த காலையின் மற்ற பங்குதாரர்களை தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் என் மாமா பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த சொத்துக்களை ரங்கராஜ் வகையறாவிடம் இருந்து 5 மற்றும் 6 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் வாங்கியது தெரியும் தேதி தெரியாது. அவர்கள் கிரையம் வாங்கும் வரை அந்த சொத்துக்களில் பொது வழியை மட்டும்747/1 ஏ வில் இருந்தவர்கள் மட்டும் பயன்படுத்தி கொண்டு வந்தார்கள் . 5,6 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய பிறகு தான் என் மாமா வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் வெளியூர்க்காரர்கள் என்றால் தெரியவில்லை. அவர்கள் இருவரும் ஏற்கனவே கிரையம் செய்து போய்க்கொண்டிருந்த தடத்தை பயன்படுத்துவதற்கு என் மாமா பணம் கேட்டு அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துளளார் என்றால் சரியல்ல. 747/2 , 748/2 ஆகிய வற்றில் உள்ள தடம் பொது தடம்என்றாலும், காலாகாலமாக எல்லோரும் பயன்படுத்திய தடம் என்றாலும், என் மாமா சொல்லியதன் பேரில் நான் பொய் சாட்சியம்

**அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மாமா தாக்கல் செய்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.**

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/-S.Indulatha,**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

**SUB COURT**, **METTUPALAYAM**